

Free Delivery & Returns
Origin Mattress Singapore



# ‘ஆன்டிபயோட்டிக்’ எதிர்ப்புக்குத் தீர்வுகாண்பதில் நம்பிக்கை



புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சிஓஇ-பிஎன்எச்2 ஆன்டிபயோட்டிக் மருந்து. **படம்: என்யுஎஸ் ஐ-எஃப்ஜஎம் கழகம்**

24 Mar 2024 16:11 | 2 mins read

சிங்கப்பூரில் மேற்கொள்ளப்பட்ட இரு ஆய்வுகளின் மூலம் ஆன்டிபயோட்டிக் மருந்துக்கு இருந்துவரும் எதிர்ப்புக்குத் தீர்வுகாணப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரம்

Used Rack Shop | Singapore
Gold Wind Engineering... Open

அப்பிரச்சினை கவனிக்கப்படாவிட்டால் 2050ஆம் ஆண்டுக்குள் உலகளவில் 10 மில்லியன் பேர் இறக்கக்கூடும். ஐக்கிய நாட்டுச் சபையின் மருந்து தொடர்பில் அமைப்புகளுக்கு இடையிலான குழு ஒன்று 2019ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டது.

முதல் ஆய்வில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் (என்யுஎஸ்) ஐ-எஃப்ஜஎம் கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள், காசநோய் சம்பந்தப்படாத ‘மைக்கோபேக்டீரியல்’ ரக நுண்ணிய ரக கிருமிகளுக்கு எதிராக சிகிச்சை வழங்கப் பயன்படக்கூடிய சிஓஇ-பிஎன்எச்2 எனும் ஆன்டிபயோட்டிக்  மருந்தை உருவாக்கியுள்ளனர். அதுபோன்ற நுண்ணிய கிருமி வகைகளை சாதாரண மருந்தைக் கொண்டு கையாள முடியாது.

இந்த ஆய்வின் முடிவுகள் சைன்ஸ் டிரான்ஸ்லேஷனல் மெடிசின் எனும் அறிவியல் சஞ்சிகையில் சென்ற




Origin Hybrid Mattress
SGD 399 The Original Hybrid Mattress in Singapore. The Origin Hybrid Mattress is our most...
Origin Mattress Singapore
Visit Site

விளம்பரம்

சமூகம்

23 Mar 2024
மணம் கமழட்டும், மனம் மகிழட்டும்!


23 Mar 2024
அகத்தை முகத்தில் அறியும் அரும்பணியில் மலரவன்


மாதம் 21ஆம் தேதியன்று வெளியிடப்பட்டன.

மற்றோர் ஆய்வில், பாக்டீரியா கிருமியும் அவற்றில் உள்ள தீங்கு விளைவிக்கும் டாக்சின் துளிகளும் மனிதர்களின் உடலில் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் முறையை நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழம், பிரான்சின் டுலூஸ் பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அவ்வாறு எழும் எதிர்ப்பு சக்தி வீக்கத்துக்கு வழிவிடும். கிருமித் தொற்றுக்கு சிகிச்சை அளிப்பதில் வீக்கம் முக்கியப் பங்கு வகிக்கிறது. அதேவேளை, இதய நோய் போன்ற நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கு வீக்கம் பிரச்சினையாக அமையக்கூடும்.

இந்த ஆய்வின் முடிவுகள் தேசிய அறிவியல் கழகத்தின் 'புரோசீடிங்ஸ்' எனும் சஞ்சிகையில் இவ்வாண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டன.

சிங்கப்பூர் | மருத்துவம் | ஆய்வு | என்யுஎஸ்


23 Mar 2024

**உணவோடு உவப்பூட்டும் நோன்பு துறப்பு**



22 Mar 2024

**அவாண்ட் நாடகக் குழுவின் மாபெரும் படைப்பு 'பரமேஸ்வரா'**



22 Mar 2024

**கனவு சிதைந்தாலும் இலக்கை எட்டிய விளையாட்டாளர்**

